பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

27 10 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா, வலிமையான நாடாக மாறுவதற்கு, நாட்டு மக்கள் அனைவரும் ஆரோக்கியமானவர்களாக இருப்பது அவசியம் என்று, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் ஒன்று முதல் 14 வயதுடைய சிறுமிகளுக்கு இலவச புற்றுநோய் தடுப்பூசி போடும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- தமிழகத்தில் 200 தடுப்பணைகள் கட்டப்படும் என்று திமுக அறிவித்த தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
- வங்கக் கடலில் உருவான Montha புயல் நாளை இரவுக்குள் கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- சென்னை ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா, வலிமையான நாடாக மாறுவதற்கு, நாட்டு மக்கள் அனைவரும் ஆரோக்கியமானவர்களாக இருப்பது அவசியம் என்று, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் காசியாபாதில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்தியாவின் சுகாதார சேவை புதிய பரிமாணம் பெற்றிருப்பதாக கூறினார்.

நமது முன்னோர்கள் கனவு கண்டபடி வலிமையான மற்றும் ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்கும் நோக்கில் ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீடு உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் மக்கள் மருந்தகங்களில் குறைந்த விலையில் மருந்துகள் கிடைப்பதன் மூலம் ஏழை, எளிய மக்கள் குறிப்பாக கிராமப்புற மக்கள் பெரிதும் பயனடைந்து வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

நீதிமன்றங்கள் சமுதாயத்திற்கும், சட்டத்திற்கும் இடையே இணைப்பு பாலமாக திகழ வேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதி திரு. சூர்யகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை பழைய சட்டக்கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர்நீதிமன்ற புதிய அறைகளை திறந்து வைத்துப் பேசிய அவர், நீதி பரிபாலனத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் அவசியம் என்றார்.

இந்தக் கட்டமைப்புகள் பொதுமக்களின் சேவையை சார்ந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட நீதிபதி திரு. சூர்யகாந்த், சட்டத்தின் ஆட்சியை மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால், நீதிமன்றங்கள் மக்களுக்கு விரைந்து நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நீதிமன்றங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி விரைவுபடுத்தி இருப்பதாகவும் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஒன்று முதல் 14 வயதுடைய சிறுமிகளுக்கு இலவச புற்றுநோய் தடுப்பூசி போடும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபயணத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இத்திட்டம் நாட்டிலேயே முதன் முறையாக 38 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட இருப்பதாக கூறினார்.

உலக அளவில் ஒரு லட்சம் பெண்களுக்கு 58 பேர் என்ற அளவில் புற்றுநோய் பாதிப்பு இருப்பதை சுட்டிக்காட்டிய அவர், இந்திய அளவில் ஒரு லட்சம் பெண்களில் 28 பேருக்கு மார்பக புற்றுநோய் ஏற்படுவதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில் 30 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு புற்றுநோய் பரிசோதனை செய்யப்பட்டு வருவதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<>>>>

தருமபுரியில் கல்லூரி மாணவியருக்கு நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதி கட்டப்பட்டு வருவதாக மாநில ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் ஷெட்யூல்டு வகுப்பினருக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

<<<<>>>>

தமிழகத்தில் 200 தடுப்பணைகள் கட்டப்படும் என்று திமுக அறிவித்த தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், மருதையாற்றின் குறுக்கே திருமானூர், தா. பழூர் உள்ளிட்ட இடங்களில் தடுப்பணை கட்டப்படும் என்ற அறிவிப்பு கிடப்பில் போடப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

இப்பகுதியில் பாசனத்திற்கும், குடிநீருக்கும் போதிய தண்ணீர் கிடைக்காமல் உள்ள நிலையில் 99 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக திமுக அரசு தவறான தகவலை வெளியிட்டு வருவதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

கந்தசஷ்டி விழாவின் முக்கிய அம்சமான சூரசம்ஹாரம் முருகப் பெருமான் ஆலயங்களில் இன்று நடைபெறுகிறது.

நாகை மாவட்டம் சிக்கல் சிங்காரவேலர் ஆலயத்தில் சூரசம்ஹார விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற முருகப்பெருமான் சக்திவேல் வாங்கும் நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற சுவாமி வேல் வாங்கும் நிகழ்ச்சியிலும் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

<<<<>>>>

வங்கக் கடலில் உருவான Montha புயல் தற்போது சென்னைக்கு 600 கிலோ மீட்டர் கிழக்கு - தென்கிழக்கே மையம் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது அடுத்த 12 மணி நேரத்தில் மேற்கு - வடமேற்கு திசையை நோக்கியும், அதன் பிறகு வடக்கு - வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து நாளை தீவிரப் புயலாக வலுப்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினம் - கலிங்கப்பட்டினம் இடையே காக்கிநாடா அருகே நாளை மலை அல்லது இரவு கரையைக் கடக்கக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

புயல் கரையைக் கடக்கும்போது மணிக்கு 90 முதல் 100 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் அந்த மையம் எச்சரித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ககோபதர் ராணுவ முகாம் தாக்குதல் வழக்கில் தொடர்புடைய உல்பா அமைப்பின் முக்கிய நிர்வாகி, அஸ்ஸாம் ரைபில்ஸ் படைப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

<<<<>>>>

நகர்ப்புற வாழ்விடங்கள் பற்றிய நில அளவை குறித்த மாவட்ட ஆட்சியர்களுக்கான இரண்டு நாள் பயிலரங்கம், உத்தராகண்ட் மாநிலம் முசோரியில் நேற்று தொடங்கியது.

<<<<>>>>

தலைநகர் தில்லியில், காற்று மாசைக் கட்டுப்படுத்தும் விதமாக, கன்னாட் பிளேஸ் மற்றும் கான் மார்க்கெட் பகுதிகளில், செயற்கை பனிமூட்டத்தை ஏற்படுத்தும் கம்பங்களை அமைக்க, புதுதில்லி மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனின் வருகையை முன்னிட்டு, கோவையில், இன்று முதல் மூன்று நாட்களுக்கு, ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

வேலூர் மாவட்டம் காட்பாடியில் உள்ள கழிஞ்சூர் ஏரி நிரம்பி உபரி நீர் வெளியேறும் பகுதிகளை நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில், அப்பாவி மக்கள் மீது தாகுகுதல் நடத்தி, கடும் ரகளையில் ஈடுபட்ட 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் தோல்கழிவு சேமிப்புக் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்தன.

**<<<<>>>>**

தேனி மாவட்டம் மயிலாடும்பாறை அருகே கரும்புத் தோட்டத்திற்குள் புகுந்த மலைப் பாம்பு தீயணைப்பு துறையினரால் பிடிக்கப்பட்டு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் விடப்பட்டது.

**<<<<>>>>**

தூத்துக்குடி தருவைகுளம் மற்றும் பட்டினமருதூர் கடற்பகுதியில் கடல்நீர் அரக்கு நிறத்தில் காணப்படுவதால் மீனவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

**<<<<>>>>**

சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் இன்று முதல் நாளை மறுநாள் வரை ஏதாவது ஒரு நாளில் பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

சென்னை ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

வரும் 2ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்திய இளம் வீராங்கனைகளான மாயா ராஜேஸ்வரன் ரேவதி, ஸ்ரீவள்ளி பாமிதிபதி, சஹஜா யாமலபள்ளி ஆகியோர் நேரடியாக பிரதான சுற்றில் பங்கேற்கும் வகையில் Wild Card சலுகை வழங்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா - பங்களாதேஷ் இடையேயான ஆட்டத்தின்போது மழை குறுக்கிட்டதால் போட்டி கைவிடப்பட்டு, இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

<<<<>>>>